# குன்றுதோறாடும் குமரன் கவசம்

## குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குக் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

**கணபதி துணைவா கங்காதரன் புதல்வா**
**குணவதி உமையாள் குமர குருபரா**
**வள்ளிதெய் வானை மருவிய நாயகா**
**துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா** - 4

அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியனு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா - 8

**சண்முகநதியும் சராபன்றி மலையும்**
**பன்முகம் நிறைந்த பழனிக்கு இறைவா**
**ஆறாறு நூற்று அட்டமங் களமும்**
**வீரவை யாபுரி விளங்கும் தயாபரா** - 12

ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும் - 16

**வடிவம் சிறந்த மகரகுண் டலமும்**
**தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்**
**திருவெண் ணதீறணி திருநுதல் அழகும்**
**கருணைபொழியும் கண்ணான்கு மூன்றும் - 20**

குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும் - 24

**காரிகை உமையாள் களித்தே இனிதெனச்**
**சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்**
**பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்**
**வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும் - 28**

முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம் - 32

**கையால் எடுத்து கனமார் (பு) அணைத்தே**
**ஐயா … குமரா … அப்பனே … என்று**
**மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்**
**கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி - 36**

முன்னே கொட்டி முருகா … வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக - 40

**தாவிய தகரேறும் சண்முகா வருக**
**ஏவியவே லேந்தும் இறைவா வருக**
**கூவிய சேவல் கொடியோய் வருக**
**பாவலர்க் கருள்சிவ பாலனே வருக - 44**

அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகில் சிவனொளி அய்யனே வருக
கலபம் அணியுமென் கந்தனே வருக - 48

**மருமலர்க் கடம்பணி மார்பா வருக**
**மருவுவோர் மலரணி மணியே வருக**
**திரிபுர பவனெனும் தேவே வருக**
**பரிபுர பவனெனும் பவனே வருக - 52**

சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலில்சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும் - 56

**அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்**
**சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்**
**நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்**
**தங்கரை ஞாணும் சாதிரை மாமணி - 60**

பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திரவாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும் - 64

**ஒருகோடி சூரியன் உதித்த பிரபை போல்**
**கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்**
**இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்**

**ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும் - 68**

வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும் - 72

**ஒழுகிய சந்தனம் உயர்கஸ்தூரியும்**
**வலம்புரி சங்கொலி மணியணி மிடறும்**
**நலம்சேர் உருத்திர அக்க மாலையும்**
**மாணிக்கம் முத்து மரகதம் நீலம் - 76**

ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணி பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும் - 80

**கருணைபொழியும் கடாட்சவீட் சணமும்**
**கவசம் தரித்தருள் காரண வடிவும்**
**நவவீரர் தம்முடன் நற்காட்சி யான**
**ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம் - 84**

ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேல்குடை ஒருகை தண்டாயுதம் - 88

**ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்**
**அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்**
**பங்கயக் கமலப் பன்னிரு தோளும்**
**முருக்கம் சிறக்கும் முருகா சரவணை - 92**

இருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்துகொண் டாடத்

தானவர் அடியர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்ய - 96

**சக்திகள் எல்லாம் தாண்டவ மாட**
**அஷ்ட பைரவர் ஆனந்தமாட**
**துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க**
**சத்த ரிஷிகள் சாந்தக மென்னச் - 100**

சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள் - 104

**நயமுடன் நின்று நாவால் துதிக்க**
**அஷ்ட லஷ்மி அம்பிகை பார்வதி**
**கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த**
**இடும்பா யுதன்நின் இணையடி பணிய - 108**

ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவல் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தர்வர் பாடிக் கவரிகள் வீசிச் - 112

**சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக**
**பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்**
**பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட**
**அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க - 116**

குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த - 120

**நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்**

**உருத்திர வீணை நாதசுர மேளம்**
**தித்திமி என்று தேவர்கள் ஆடச்**
**சங்கீத மேளம் தாளம் துலங்க - 124**

மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும் - 128

**வந்தனம் செய்ய வானவர் முனிவர்**
**எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர**
**ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்**
**வீரமயி லேறி வெற்றிவேல் எடுத்துச் - 132**

சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலறக் குலத்தை அறுத்துச் சயித்து - 136

**விடுத்தவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்**
**தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி**
**அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்**
**திருப்பரங் குன்றம் சீர்பதி செந்தூர் - 140**

திருவாவி நன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலிமலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை - 144

**கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்**
**முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்**
**நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்**
**கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும் - 148**

பதினா லுகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க ...
கேட்ட வரமும் கிருபைப் படியே - 152

**தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா**
**நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்**
**தாட்டிக மாய்எனக் (கு) அருள்சண் முகனே - 155**

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ... - 157

குன்றாத குடிவாழ்க்கை தந்தருளும்
மயூரகிரிநாதனுக்கு அரோகரா